# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL


# அனைத்துலகத் தேர்வு

# 2014

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 5

சுட்டெண்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 15 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று ________________ .

   (புறநானூறு, சிலப்பதிகாரம், நாலடியார்)

2. **குறள் :-** அகர முதல எழுத்தெல்லாம் ஆதி

   ________________ முதற்றே யுலகு

   (பகைவன், பகாவன், பகவன்)

3. எம் இனத்தின் பெருமைக்குச் சான்றாக அமைவது ________________ .

   (தைப்பொங்கல், வாணிவிழா, கலைவிழா)

4. தமிழில் உள்ள உயிர் எழுத்துகள் ________________ .

   (18 , 216, 12)

5. பின்வருவனவற்றுள் கமழ்வுப் பொருட்கள் ________________ .

   (மயிற்பீலி யானைமருப்பு, ஏலம் கராம்பு, முத்து பவளம்)

6. விடை என்ற சொல் குறிப்பது ________________ .

   (காளையை, மானை, சிங்கத்தை)

7. கதிரவன் காலிக்கும் திக்கு ________________ .

   (மேற்கு, வடக்கு, கிழக்கு)

8. அருண்மொழித்தேவன் என்ற பெயருக்குரிய மன்னன்

   ________________ .

   (இராசராசசோழன், இராசேந்திரசோழன், குலோத்துங்கசோழன்)

9. பாம்பைக் கண்ட சிறுவனின் இதயம் ______________ என அடித்தது.

(மடமட, படபட, மளமள)

10. மனதில் உட்பகை தோன்றினால் இனம் ______________ .

(வென்றுவிடும், சேர்ந்துவிடும், அழிந்துவிடும்)

11. சிலப்பதிகார அரங்கேற்றுக் காதையில் அரங்கேறிய மங்கை

______________ .

(கண்ணகி, மாதவி, மாதுரி)

12. ______________ உடலை உறுதியாக வைத்திருப்போம்.

(அவர்கள், நீங்கள், நாங்கள்)

13. கைக்கு வருமுன்னே ______________ விலை பேசேல்.

(நெய்க்கு, பாலுக்கு, மோருக்கு)

14. பால் + குடம் என்பதைச் சேர்த்து எழுதினால் ______________ .

(பால்க்குடம், பால்குடம், பாற்குடம்)

15. ஒலிம்பிக் போட்டியில் முதன் முதலில் பெண்கள் பங்குபற்றிய ஆண்டு

______________ .

(1920, 1912, 1924)

16. மீனா நேற்றுத் தேர்வு எழுதினாள். மீனா நாளை தேர்வு

______________ .

(எழுதினாள், எழுதுவாள், எழுதுகின்றாள்)

17. **பழமொழி :-** கூடி வாழ்ந்தால் கோடி ______________ .

(நன்மை, தீமை, வறுமை)

18. காகம் தன் இனத்தை ______________ உண்ணும் பறவை.

(பிரித்து, விலக்கி, அழைத்து)

19. வீரச்சாவு அடைந்தவர்களுக்கு ______________ நாட்டுவது தமிழர் மரபு.

(நடுகல், செங்கல், சிற்பக்கல்)

20. பண்டைத் தமிழகக் குமுகாயம் ______________ அடிப்படையில் அமைந்திருந்தது.

(கல்வி, பணம், தொழில்)

21. குதிரை கனைக்கும் அது போல கரடி ______________ .

(கதறும், கரையும், கத்தும்)

22. 'வாழைப்பழம்' என்பதைப் பிரித்தால் ______________ .

(வாழைக் + பழம், வாழை + பழம், வாழை + ப்பழம்)

23. ஈழத்தின் வடமேற்கில் ______________ அமைந்துள்ளது.

(மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு)

24. வயலும் வயல் சார்ந்த இடமும் ______________ .

(குறிஞ்சி, மருதம், முல்லை)

25. ஈரூடக உயிரி ______________________ .

(மீன், எலி, முதலை)

26. உவர்ப்புச் சுவை உடையது ______________________ .

(நெல்லி, உப்பு , பாக்கு)

27. முல்லை நிலத்திற்குரிய மரம் ______________________ .

(கொன்றை, வேம்பு, வாகை)

28. நீரில் வளரும் செடிகளில் ஒன்று ______________________ .

(ஆம்பல், மல்லிகை, றோசா)

29. ஒற்றுமையாக வாழ்ந்தால் உலகில் ______________________ காணலாம்.

(இறக்கம், ஏற்றம், வேற்றுமை)

30. ______________________ சிலப்பதிகாரத்தை எழுதினார்.

(செங்குட்டுவன், நெடுஞ்சேரலாதன், இளங்கோவடிகள்)

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

விளையாட்டுகள் உடல் நலத்தையும் உள மகிழ்வையும் தருகின்றன. எமது மரபுவழி விளையாட்டுகளாகக் கிளித்தட்டு, கிட்டிப்புள், சிலம்பம், வாரோட்டம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். கிளித்தட்டு விளையாடுவோர் இரு கன்னையாகப் பிரிந்து நிற்பர். கன்னை என்பது குழு எனப் பொருள்படும். ஒரு கன்னை தட்டினுள் இறங்க மற்றக் கன்னை அதை எதிர்த்து மறிக்கும். மறிக்கும் கன்னையின் தலைவரைக் 'கிளி' அல்லது 'தாய்ச்சி' என்று அழைப்பர். முன்புறமிருந்து இறங்கும் கன்னையரைக் காய் என்பர். இறங்கும் கன்னையர் தட்டைக் கடந்ததும் பழம் ஆவர். இறங்கிய கன்னை தொடக்கக் கோட்டைப் பழமாகத் தாண்டினால் அது வெற்றி பெற்றதாகக் கருதப்படும்.

1. விளையாட்டுகள் எவற்றைத் தருகின்றன?

_______________________________________________

_______________________________________________

2. எமது மரபுவழி விளையாட்டுகள் இரண்டினைத் தருக.

_______________________________________________

_______________________________________________

3. கிளித்தட்டு விளையாடுவோர் எத்தனை கன்னையாகப் பிரிந்து நிற்பர்?

_______________________________________________

4. கிளித்தட்டு மறிக்கும் கன்னையின் தலைவரை எப்படி அழைப்பர்?

_______________________________________________

5. கிளித்தட்டு விளையாட்டில் 'காய்' என யாரை அழைப்பர்?

_______________________________________________

| புள்ளிகள் 10 |
|---|

## 3) கீறிட்ட இடங்களில் மிகப்பொருத்தமான சொல்லை எழுதுக.

| | | |
|---|---|---|
| கணீர்கணீர் | அக்கம்பக்கம் | கையும்மெய்யுமாக |
| கடகட | தன்னந்தனியே | |

1. நாம் ______________________ பார்த்து வீதியைக் கடக்கவேண்டும்.

2. கோவில் மணி ______________________ என்று ஒலித்தது.

3. திருவிழாவில் பெற்றோரைத் தவறவிட்ட சிறுவன் ______________________ அழுது கொண்டிருந்தான்.

4. கள்வனைக் ______________________ப் பிடித்துக் காவலரிடம் ஒப்படைத்தனர்.

5. கல் வீதியில் மாட்டு வண்டி ______________________ எனச் சென்றது.

புள்ளிகள் 10

## 4) பாடநூல் வினா ஏழில் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. பழந்தமிழர் வணிகம் பற்றிக் குறிப்பிடும் நூல்களின் பெயர்கள் இரண்டினைத் தருக.

_______________________________________________

_______________________________________________

2. மாதோட்டத்தில் பாலாவி ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஈச்சுரம் எது?

_______________________________________________

_______________________________________________

3. பொதுவியல், வேத்தியல் என்ற இரு பிரிவுகளை உடைய கலை எது?

_______________________________________________

_______________________________________________

4. முல்லை நில மக்களின் தொழில்கள் இரண்டினைத் தருக.

_______________________________________________

_______________________________________________

5. தைப்பொங்கல் அன்று சிறந்து நிற்கும் தமிழரது பண்பாடு எது?

_______________________________________________

_______________________________________________

6. இளங்கோவடிகளின் தந்தையின் பெயர் என்ன?

_______________________________________________

_______________________________________________

7. ஒலிம்பிக் போட்டியின் குறிக்கோள்களில் இரண்டினைத் தருக?

_______________________________________________

_______________________________________________

புள்ளிகள் 10

**5) பாடல் வினாக்களுக்கு முழுவிடை தருக.**

*வானவில்லில் ஏழுநிறங்கள் இருப்பதும் ஏன் - அது*
*வானில் இருக்கும் கதிரவனின் ஒளியினால்தான்*
*மரத்தின் இலைகள் மெல்லமெல்ல அசைவதும் ஏன்*
*மனதை மகிழவைக்கும் தென்றல் காற்று வீசுவதால்தான்*

*கடல் நீரும் வாயில் வைத்தால் உவர்ப்பதும் ஏன்*
*கறிக்குப் போடும் உப்பு அதில் கலந்திருப்பதனாலத்தான்*
*மரஞ்செடிகள் மண்ணில் நன்றாய்ச் செழிப்பதும் ஏன்*
*மண்குளிரப் பெய்கின்ற மழையினால்தான்*

*வண்டுகளும் மலரைச் சுற்றிப் பறப்பதும் ஏன் - தேனை*
*உண்டுகளித்து பசியாறி மகிழ்ந்திடத்தான்*
*இரவும் பகலும் மாறிமாறி வருவதும் ஏன்*
*இடைவிடாது பூமி தன்னைச் சுற்றுவதால்தான்*

1. வானவில்லில் எத்தனை நிறங்கள் இருக்கின்றன?

______________________________________________

2. மெல்லமெல்ல அசைவன எவை?

______________________________________________

3. கடல் நீரில் என்ன கலந்திருக்கிறது?

______________________________________________

4. எவை மலரைச் சுற்றிப் பறக்கின்றன?

______________________________________________

5. தன்னைத்தானே சுற்றுவது எது?

______________________________________________

புள்ளிகள் 10

**6) மிகப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்து கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| இஞ்சி | உணவை | நோய்களையும் |
| உடல்நலத்தை | அறுசுவைகளும் | |

நாம் உண்ணும் ________________ உடல் நலத்திற்கு ஏற்றதாக உண்ண வேண்டும். ஊட்டச் சத்துகள் நிறைந்த உணவே உடல் நலத்திற்கு ஏற்றதாகும். நம் முன்னோர் வகுத்துத் தந்துள்ள ________________ உடல் நலத்திற்கு ஏற்றவையாக அமைந்துள்ளன. அத்துடன் அவை மருத்துவப் பண்புகளையும் கொண்டுள்ளன. மருத்துவப் பண்புகள் கொண்ட மிளகு, வெந்தயம், ________________, உள்ளி போன்ற பலசரக்குப் பொருட்களை உணவில் சேர்க்க வேண்டும். இப் பலசரக்குகள் குணப்படுத்த முடியாத ________________ குணப்படுத்தும் வல்லமை கொண்டவை. எனவே நாம் அனைவரும் பல சரக்குகளை உணவில் சேர்த்து ________________ப் பேணுவோம்.

புள்ளிகள் 10

## 7. பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

Jeg lærer tamilsk på tamilskskolen. Jeg kan lide tamilsk. Tamilsk er mit modersmål. Jeg kan lide at lære tamilsk.

I am learning thamil in thamil school. Thamil language is my mother tongue. That is an old language. I am learning to hear, speak. read and write in thamil.

J'apprends le tamoul dans une école tamoul. Le tamoul est ma langue préférée. C'est ma langue maternelle. J'aime apprendre le tamoul.

Ich erlerne die tamilische Sprache an einer tamilischen Schule. Ich mag die Sprache Tamil. Die tamilische Sprache ist meine Muttersprache. Ich lerne gerne Tamil.

Ik studeer Tamil op Tamilschool. Tamil is mijn lievelingstaal. Tamil is mijn moedertaal. Ik leer Tamil met plezier.

Io studio il Tamil presso una scuola di lingua Tamil. La lingua Tamil è la mia lingua preferita. Il Tamil è la mia lingua madre. Mi piace studiare il Tamil.

Jeg lærer tamil på tamilskolen. Jeg liker tamilspråket. Tamil er mitt morsmål. Jeg liker å lære tamil.

Jag lär mig tamilska i den tamilska skolan. Tamilska är ett språk som jag tycker om. Tamilska är mitt modersmål. Jag lär mig tamilska med vilja.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

**புள்ளிகள் 05**

**8) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து; 60 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ஆடற்கலை
- ஒற்றுமையே வலிமை என்ற பாடலைக் கதையாக எழுதுக.
- உமது வாழிடப் பள்ளி.

புள்ளிகள் 15